www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

மலர் : 6 | இதழ் : 4 | ஜனவரி : 2026 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ.15/-

Volume : 6 | Issue : 4 | Janauary : 2026 | Tamil Monthly Mgazine | Price : Rs. 15/-



## திமுக வெற்றிக்கு பரிசா..... தமிழக மக்களின் மனம் கவர்ந்த முதல்வர்



இரண்டாவது முறையாக தாம்பரம் காவல் ஆணையராக பதவி ஏற்கிறார்.



ஆவடி காவல் ஆணையாளராக திரு.பிரேம் ஆனந்த் சின்ஹா, இ.கா.ப.,



ரவுடிகளும், திருடர்களும் இது என் ஏரியா உள்ளே வராதே...



இந்தியாவில் சிறப்புமிக்க ஆட்சியர் தஞ்சை மண்ணின் வீரமங்கை

# நீதியின் நுண்ணறிவு புலனாய்வு மாத இதழ் 6ம் ஆண்டு துவக்க விழாவில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்கள் உயர் போலீஸ் அதிகாரிகள்










சென்னை, டிச, 22 நீதியின் நுண்ணறிவு புலனாய்வு மாத இதழ். மற்றும் தமிழ்நாடு – புதுச்சேரி மீடியா& பத்திரிகை நிருபர்கள் சங்கம் இணைந்து நடத்திய 2026 ஆம் ஆண்டுக்கான கலந்தாய்வு கூட்டம் கடந்த சனிக்கிழமை காலையில் கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் கே வி கே ஹாலில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு காவல்துறை துணை ஆணையர் (ஓய்வு) **கே.கருணாகரன்.** வள்ளலார் இல்லம் சமூக ஆர்வலர் யோகி **ஜெயபிரகாஷ்,** அன்பின் விழுதுகள் அறக்கட்டளை நிறுவனர் **டாக்டர் எஸ். செல்வம் உமா,** மற்றும் **அனுக்கிரஹா கண்ணன்.** சமூக ஆர்வலர் மடிப்பாக்கம். **எம்.எஸ். எம்.இ.இயக்குனர் சுரேஷ் பாபுஜி** கலந்து கொண்டனர் மேலும் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு புதுச்சேரி மீடியா பத்திரிக்கை நிருபர்கள் சங்கத்தின் மாநில தலைவர் **சு.காதர் உசேன்.** மூத்த பத்திரிகையாளர் தொலைக்காட்சி விவாத மேடை பங்கேற்பாளர் **வி.எஸ்.ராமன்,** தமிழ்நாடு புதுச்சேரி மீடியா பத்திரிகைநிருபர்கள்சங்கத்தின்(தமிழ்நாடு ) பொதுச் செயலாளர் **முரளிதரன்,** ஆசிரியர் அதிரடி குரல் மாத இதழ் **ஜெயகாந்தன்,** அரசியல் முத்திரை மாத இதழ்ஆசிரியர். **செல்வம்,** கடல் துளிகள் மாத இதழ் ஆசிரியர் **யுவராஜ்,** ஜனநாயகதூண் மாத இதழ் ஆசிரியர் **நா.சரண்குமார்,**தமிழ்நாடு புதுச்சேரி மீடியா பத்திரிகை நிருபர்கள் சங்கத்தின் பொருளாளர் **சீனிவாசன்.** பொன் டைம்ஸ் டிவி ஹெட் **வினோத்,** உள்ளாட்சி செய்தி தலைமை செய்தியாளர் **கோடீஸ்வரன்,** ஸ்பீடு பிரேக்கர் மாத இதழ் ஆசிரியர் **லட்சுமணன்** மற்றும். சிறப்பாக நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய மூத்த பத்திரிகையாளர் **எஸ்.ஆர்.சீனிவாசன்.** மற்றும் நீதியின் நுண்ணறிவு புலனாய்வு இதழ் இணை ஆசிரியர்கள் மற்றும் துணை ஆசிரியர்கள் மாவட்ட நிர்வாகிகள் மாவட்டநிருபர்கள் என அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். அனைவருக்கும் நீதியின் நுண்ணறிவு ஆசிரியர் சிவகுமார் நன்றிகள் தெரிவித்தார்...

## நீதியின் நுண்ணறிவு

www.nunnarivu.com

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

**ஆசிரியர் வெளியீட்டாளர்**
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
**J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்**

துணை ஆசிரியர்கள்
**D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன், B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,**

கௌரவ ஆலோசகர்கள்
**A.கந்தசாமி. S.P.**
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
**சுபாஷ் சந்திரபோஸ்**
காவல் துண கண்காணிப்பாளர் (ஓய்வு)
**Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,**
**மா.செல்வராஜ்**
(முன்னாள் முதல்வர் - குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
**சோம்புராஜன்**
கூடுதல்ஆணையர் தெழிலாளர்துறை (ஓய்வு)
**டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.**

முதன்மை நிருபர்கள்
**M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், V.மாதவன், A.ராஜ்மோகன்**

நிருபர்கள்
**R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின், C.சரவணன், S.சீனிவாசன், S.சஞ்சய்குமார், இம்ரான்ான், A.மதிமாறன், J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக், P.சாலமன், P.கோகுல்நாதன்,**

சட்ட ஆலோசகர்கள்
**K.M.S.செந்தில்குமார்.BSc., B.L., S.சரவணன்.M.Sc., B.L., A.வீரவாகன்.BSc., M.A., M.B.M., LL.B.,**

வடிவமைப்பு : **மகாராஜா பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை - 42.

nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com



Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.


## ஆசிரியர் பக்கம்

# ஒளி மனிதனின் உள் யாத்திரை

மனிதனின் உள் ஒளி அறிவு, கர்மா, அருள் எனும் மூன்று நிலைகள்

மனிதன் வெளி உலகை அறிந்து கொள்ள பல வழிகளில் பயணிக்கிறான் - அறிவியலால், கலைகளால், தொழிலால் ஆனால் அவன் உள் ஒளியை அறியாது போனால் அந்தப் பயணம் முழுமையடையாது. உலகின் மையம் மனிதனின் உள்ளே உள்ளது. அந்த மையத்தைத் தொட்டவனே உண்மையில் தெய்வத்தைத் தொட்டவன். அந்த உள் ஒளியை அடைய மூன்று கதவுகள் உள்ளன அறிவு, கர்மா, அருள்.

1.அறிவு — "உள்ளொளி விழிக்கும் நொடியில்"

அறிவு என்பது வெளியில் இருந்து வரும் விஷயம் அல்ல அது உள் குரலாக ஒளிர்கிறது. மனிதன் பார்க்கும் ஒளி சூரியனின் ஒளி மனிதன் உணரும் ஒளி ஞானத்தின் தீபம். அறிவு எனும் உள் ஒளி விழிக்கும் போது மனிதன் தன்னை, பிறரை, இயற்கையை, இறைவனை ஒரே திரையில் காண்கிறான். அறிவு மூன்று வடிவம் உடையது: உணர்வு அறிவு நாம் காணும் உலகை புரிந்துகொள்ளும் திறன். ஆத்ம அறிவு நாம் யார் என்று அறியும் உள் ஞானம். பரம அறிவு எல்லாவற்றிலும் பரம்பொருள் இருக்கிறான் என்பதை உணர்தல்.

2.கர்மா — "செயல் என்பது ஆன்மாவின் சுவாசம்"

அறிவு எழுந்தாலும், அதைச் செயலில் வெளிப்படுத்தாவிட்டால் அது நிழல். கர்மம் என்பது அந்த அறிவை உயிரோடு கொண்டு வரும் நடப்பு. அறிவைச் செயலில் வெளிப்படுத்தும் போது, மனிதன் தன் கடமையை கடவுளுக்கே சமர்ப்பிக்கிறான். அது தான் நிஷ்காம கர்மா பயன் எதிர்பாராது செயல் வழியே மனிதன் தன்னையும் சமூகத்தையும் வளர்த்துக் கொள்கிறான்.


3.அருள் — "அறிவும் செயலும் முடிந்தபின் வரும் அமைதி"

அறிவும் கர்மமும் சேரும் போது, மனிதன் உள்ளத்தில் பிறக்கும் அமைதியே அருள். அருள் என்பது வெளியில் விழும் கிருபை அல்ல அது உள்ளே எழும் சாந்தி. அருள் நிலை அடைந்தால், அவன் தன் நான் உணர்வை விட்டுப் பிறரைப் பார்க்கத் தொடங்குவான். அவன் நன்மை செய்வதை கடமை அல்ல, பிரேமை என நினைப்பான்.

4.மூன்று நிலைகள் — "ஒரே ஒளியின் மூன்று முகங்கள்"

நிலை அர்த்தம் செயல்பாடு ஆன்மிக விளைவு அறிவு உண்மையை அறிதல் தன்னுணர்வு மனம் ஒளிர்வு கர்மா செயலில் வெளிப்படுத்தல் கடமை உலக நன்மை அருள் பரிபூரண அமைதி தெய்வ இணைவு ஆனந்த நிலை மனிதனின் உள் ஒளி மூன்று அடுக்குகளால் ஒளிர்கிறது. அறிவு அதைத் தொடங்குகிறது, கர்மா அதை வளர்க்கிறது, அருள் அதை நிறைவு செய்கிறது.

**ஆசிரியர் வெளியீட்டாளர்**
**R.சிவகுமார்**



# நீங்கள் நீங்களாகவே இருங்கள், அதற்கு பெயர் திமிர் என்றால், அந்த திமிர் தான் பேரழகு.... அம்பேத்கர்

# ரவுடிகளும், இது என் உள்ளே



இதை சொன்னவர் பெயர் அம்பேத்கர் ஆம் நீங்கள் நினைத்த அம்பேத்கர் அல்ல இந்த வார்த்தையை சொன்னவர், இவர் ஒரு காவல்துறையை சேர்ந்த கண்ணியமான ஆய்வாளர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை அனைத்துமே இன்று வரை கட்டிக் காத்து வரும் ஒரு அருமையான காவல்துறையில் இருக்கும்,மனித நேயமிக்க மாமனிதர் இந்த ஆய்வாளர் அம்பேத்கர்,

இவரின் பெயர் அம்பேத்கர் தெரிந்தோ, தெரியாமலோ இந்த மாமனிதனின் பெயரை இவருக்கு பெற்றோர்கள் வைத்து உள்ளனர். ஆனால் சட்டமேதை அம்பேத்கர் இந்தியா போற்றும் மா மனிதராக இருக்கிறார்.

நம் ஆய்வாளர் அம்பேத்கர் தமிழகம் போற்றும் தரமான அம்பேத்கராக அனைவராலும் கண்டறியப்பட்டு, பொதுமக்களால் அரவணைக்கப்பட்டு, ரவுடிகளை அலற விட்டு,தான் பணிபுரியும் சரகத்தில் உள்ள கெட்டவர்களை நடுங்க வைப்பதும், நல்லவர்களுக்கு உதவி செய்வதும், இவருடைய இயல்பான குணம் என்பது எத்தனை பேருக்கு தெரியும்.

சரி யார் இந்த அம்பேத்கர் வாங்க இந்த கட்டுரையில் பார்ப்போம் தற்போது கடலூர் மாவட்டம் சிதம்பரம் பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் இந்த அம்பேத்கர் கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பது இவருக்கு பல பிரச்சனைகளை கொடுக்கிறது.

எப்போதுமே நேர்மையாக இருப்பவர்களுக்கு பிரச்சினைகள் அதிகமாக தன வரும் அதில் இவரும் விதிவிலக்கல்ல, கெட்டவர்களுக்கும், ரவுடிகளுக்கும், திருடர்களுக்கும், ஏன் கெட்ட அரசியல்வாதிகளுக்கும் இவர் சிம்ம சொப்பனமாக இருக்கும் பொழுது இவர் மீது பொய்யான ஜோடிக்கப்பட்ட குற்றங்களை சுமத்துவது என்பது பெரிய விஷயம் இல்லையே,

ஆண்டாண்டு காலமாக நேர்மையாக உள்ளவர்களுக்கு கிடைக்கக்கூடிய வெகுமதி தான இது, சமீப காலமாக ஒரு பெண்மணியின் அவதூறு

# திருடர்களும் ஏரியா வராதே...

வீடியோ ஒன்று ஆய்வாளர் அம்பேத்கரின் சுற்றியே வருகிறது இதை ஒரு சூழ்ச்சி கொண்ட ஒரு குழுவினர் ஒன்று சேர்ந்து இவரை எப்படியாவது அசிங்கப்படுத்த வேண்டும் தண்டிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

ஏன் இது போன்ற பொய் குற்றச்சாட்டுகள் பரவுகிறது அதற்கு காரணம் என்ன அம்பேத்கர் பணி புரியும் காவல் நிலையத்திற்கு எல்லையில் உள்ள ஒரு பிரபல ரௌடியால் அந்தப் பகுதியில் உள்ள சில இடங்களில் காப்பர் கம்பிகள் திருடப்பட்டு வருகிறது. மேலும் இந்த காப்பர் திருட்டு வழக்கில் அந்த ரவுடியின் மனைவியும் உடந்தையாக இருப்பது



அம்பேத்கரின் விசாரணையில் தெரிய வருகிறது அதை தொடர்ந்து அவரின் விசாரணை வளையத்தில் அவர்களை பிடித்து விசாரிக்கும் பொழுது மேற்கண்ட திருட்டு வழக்கில் அவர்களுக்கு முழு சம்பந்தம் இருப்பது தெரியவந்து, இருவரையும் சிறையில் அடைக்கிறார்.

இதன் பின்பு சிறையில் இருந்து வந்த அந்த பெண்மணி மீண்டும் ஏதாவது வழக்கில் தன்னை சேர்த்து விடுவார்கள் என்று பயத்தில் சிலரின் தூண்டுதலின் பேரில் ஆய்வாளர் அம்பேத்கர் மீது ஆதாரமில்லாத பல குற்றச்சாட்டுகளையும் பல விமர்சனங்களையும் தொடர்ந்து வைத்து வருவதாக கூறப்படுகிறது.

ஆனால் கிட்டத்தட்ட பல்வேறு சமூக வலைத்தள தொலைக்காட்சிகளில் அவருடைய பேட்டிகள் தொடர்ந்து வந்தாலும் கூட அதில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை அறிந்த காவல்துறை உயர் அதிகாரிகள் அது பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது நிதர்சனமான உண்மை காரணம் அம்பேத்கர் என்ற இந்த ஆய்வாளர் எங்கு பணிபுரிந்தாலும் நல்லவர்களுடன் இணக்கமாகவும், ரவுடி மற்றும் திருடன் மற்றும் பொதுமக்களுக்கு தொந்தரவு செய்யும் நபர்கள் அனைவருக்கும் ஆய்வாளர் அம்பேத்கர் எப்படி பிடிக்கும்,

சனாதான கும்பலுக்கு சட்டமேதை அம்பேத்கர் பிடிக்காதோ அதேபோல ரவுடிகளுக்கும், திருடர்களுக்கும், இந்த ஆய்வாளர் அம்பேத்கர் பிடிக்காது

அதனால் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்து அவரை ஒன்று இல்லாமல் பண்ணி விடலாம் என எண்ணி ஒரு கும்பல் சதி செய்து வரும் இந்த வேலையில்,இவர் பணிபுரிந்து வரும் அந்த சரகத்தில் பல பொதுமக்கள் பெண்கள்,ஆண்கள் உட்பட பல அமைப்புகளை சேர்ந்தவர்கள் ஆய்வாளர் அம்பேத்கர் பின்பு இருப்பது பெரும் ஆச்சரியத்தை நமக்கு பறைசாற்றுகிறது.

காரணம் குற்றவாளிகளுக்கும், ரவுடிகளுக்கு எதிராகவும்,ஒரு நேர்மையான அதிகாரிக்கு ஆதரவாக பொதுமக்கள் இப்படி களத்தில் இருப்பதுதான்,

இந்த காலத்திலும் இதுபோன்ற அதிகாரிகள் நம் தமிழக காவல்துறையில் பணிபுரிந்து வருவது இந்த காவல்துறைக்கு பெருமையே,

ஒரு காவல் அதிகாரி மீது பொய்யான குற்றச்சாட்டு சொல்லி வரும் போது அந்த குற்றச்சாட்டை தைரியமாக எதிர்கொள்வதில் அம்பேத்கர் ஒரு ஆகச் சிறந்த தைரியசாலிதான்.

'மடியில் கணம் இல்லை,வழியில் பயம் இல்லை' என்பதையே காட்டு கிறது மேலும் அவருக்கு மேல் பணி புரியும் உயர் அதிகாரிகள் அவருக்கு கொடுக்கும் உத்தரவாதமும் உறுதியும் உங்கள் மீது தவறு இருக்காது எங்களுக்கு தெரியும் தொடர்ந்து உங்கள் பணியை செய்யுங்கள் எதுவாக இருந்தாலும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என கொடுக்கும் அந்த உத்தரவாதம் அவரை இன்னும் விவேகமாகவும், வேகமாகவும்,நேர்மையாகவும் ஓட வைக்கிறது.

எனவே இவர் மீது தவறான குற்றச்சாட்டுகளை கூறி வரும் அந்த கும்பல் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடலூர் மாவட்டம்,சிதம்பரம் பகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.என இந்த கட்டுரை மூலம் தெரிவித்து உள்ளனர்.

அம்பேத்கர் ஆய்வாளர் தொடர்ந்து தன் உயரதிகளால் சிறப்பாக பணிபுரிந்து வருவதற்காக பல விருதுகளை தொடர்ந்து பெற்று வருவதும் குறிப்பிடத்தக்க விஷயம் ஆகும்

முதன்மை நிருபர்
**எம்.எஸ்.கே. பாரதி**



# சட்டமன்ற தேர்தலை சந்திக்க இளம் விடுதலை சிறுத்தைகள் தயார், திருமாவளவன் வீயூகம் வெல்லுமா!!

**அன்பார்ந்த தோழர்களே,**

என் உயின் உயிரான விடுதலைச்சிறுத்தைகளே, வணக்கம். முகநூல் நேரலையில் புதிய மாவட்டப் பொறுப்பாளர்களுக்கான பட்டியலை அறிவிக்க உள்ளேன் சட்டமன்றத் தொகுதிவாரியாக மாவட்ட செயலாளர்களை நியமிக்கும் இந்நடவடிக்கை அரசியல் தளத்தில் ஒரு புதிய பரிமாணம் ஆகும். தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ள தொகுதி எல்லையே நமது கட்சி மாவட்ட எல்லையாக ஏற்று அதனடிப்படையில் தொகுதிக்கு ஒரு செயலாளரை நியமிக்கவுள்ளோம்.

2011ஆம் ஆண்டிலேயே இதனை நடைமுறைப்படுத்திட முயற்சித்தேன். அப்போது முன்னணித் தோழர்களிடையே ஒருமித்த ஏற்பிசைவு உருவாகிடவில்லை. ஆகவே, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பெற்ற கலந்துரையாடலின் விளைவாக தற்போது ஒருமித்த கருத்து உருவாகியது. அதாவது, உயர்நிலைக் குழு உள்ளிட்ட அனைத்து முன்னணி பொறுப்பாளர்களின் ஏற்பிசைவோடும் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது. 38 வருவாய் மாவட்டங்களில் 2018 இல் 78 பேர் மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

அதன் பின்னர் 2023 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 23 ஆம் நாள் 144 பேர் மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர். அப்போது மாவட்ட நிர்வாகத்தின் பிற புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. ஏனெனில், விரைவில் 234 தொகுதிகளும் 234 பேர் மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட உள்ள நிலையில், அப்போது புதிதாக மாவட்ட நிர்வாகத்தின் பிற பொறுப்பாளர்களும் நியமிக்கப படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் , தவிர்க்க இயலாத காரணங்களால் அவ்வாறு உடனடியாக அதனை நடைமுறைப்படுத்திட இயலவில்லை.

தற்போது தான் காலம் கைக்கூடி வந்துள்ளது. திட்டமிட்டவாறு 234 மாவட்ட செயலாளர்களை நியமிக்க உள்ளோம்.நம்முடைய கட்சியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நாம் இந்த புதிய முயற்சியை மேற்கொள்கிறோம்.

வேறு எந்த கட்சியிலும் இல்லாத ஒரு புதிய நடைமுறையை நாம் தொடங்கி வைக்கிறோம்.கட்சி அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்வது; அதனடிப்படையில் அதிகார வலிமையுள்ள ஆளுமைகளாக இயக்கத் தோழர்களை வளர்த்தெடுப்பது;பரந்துபட்ட அளவில் வெகுமக்களை அமைப்பாக்கி அவர்களை அரசியல்படுத்துவது; கொள்கை மற்றும்

கோட்பாட்டுப் புரிதல் கொண்ட அடுத்தடுத்த தலைமுறையினரை உருவாக்குவது என்கிற தொலைநோக்குப் பார்வையைக் களத்தில் செயற்படுத்துவது; தத்துவார்த்த அடிப்படையில் தலைமைத்துவத்தை மேம்படுத்துவது;

தன்னார்வத்துடன் மக்களுக்குப் பணியாற்றும் தொண்டுள்ளத்தை வலுப்பெறச் செய்வது; -போன்ற பல்வேறு உயரிய நோக்கங்களுடன்தான் இந்த அரசியல் உத்திகளை நாம் கையாளுகிறோம். இதற்கு வழக்கம் போல உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் நமது கட்சியின் மேம்பாட்டுக்குத் தவிர்க்க இயலாத தேவையாகும்.

ஏறத்தாழ 2000 பேருக்கும் மேலானவர்கள் 234 பொறுப்புகளுக்கு விண்ணப்பித்துள்ள நிலையில், அவர்களிலிருந்து 234 பேரை மட்டுமே தேர்வு செய்தாக வேண்டும் என்கிற தவிர்க்கமுடியாத இக்கட்டில் சிக்கியுள்ள நான், விருப்பு-வெறுப்பு ஏதுமின்றி இத்தேர்வுகளைச் செய்துள்ளேன்.

நவம்பர் 07 ஆம் நாள் தொடங்கி இதுநாள் வரையில் இரவு பகலாக கண் துஞ்சாமல் ஆயிரக்கணக்கான மனுக்களைப் புரட்டிப்பார்த்து ஒருவருக்கு மூவர் என்னும் அடிப்படையில் தெரிவு செய்து அவர்களில் ஒருவர் என தேர்வு செய்துள்ளேன். எனது இந்தக் கடும் பணியின் விழுமியங்களை உணர்ந்து மனப்பூர்வமாக ஏற்று ஒத்துழைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.உடனிருப்பவர்கள் அல்லது உயரிய பொறுப்பிலிருப பவர்கள் அல்லது நெருக்கமானவர்கள் செய்யும் பரிந்துரைகளை மட்டும் ஏற்பதாக இருந்தால் ஒரு சில நாட்களிலேயே எப்போதே இந்தப் பட்டியலை நான் அறிவித்திருக்க முடியும். அவ்வாறின்றி, அனைத்து விண்ணப்பங்களையும் பொறுமையாய் பரிசீலித்து இத்தேர்வுகளைச் செய்துள்ளேன். இதில் 234 பேருக்கு மட்டுமே மகிழ்ச்சி இருக்கும். ஆயிரக் கணக்கான தோழர்களுக்குக் கட்டாயம் வருத்தமே எஞ்சும் என்பதை நான் அறிவேன். அவ்வாறு வருந்துவோரில் நானும் ஒருவனாகவே இருப்பேன். என்மீது பெரிதும் எதிர்பார்ப்புடன் நம்பிக்கையுடன் இருந்த தம்பிகளுக்கும் தங்கைகளுக்கும் ஏமாற்றத்தைத் தந்துவிட்டோமே என்கிற பெரும் வலியே எனக்கு மேலோங்கும். உங்கள் ஒவ்வொருவரின் வலியும் எனக்கான வலியாகும் போது ஆயிரக் கணக்கில் அது பெருகி என்னை வெகுவாக அழுத்தும்.எனவே, மாவட்ட செயலாளராகப் பொறுப்பேற்கும் பெருவாய்ப்புக்காகக் காத்திருந்த உங்களுக்கு அதனைப் பெற இயலாத ஏமாற்றத்தைத் தர நேர்ந்தமைக்காக மிகவும் வருந்துகிறேன் அவ்வாய்ப்பு கிடைக்கப் பெற இயலாத என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் இதனைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

**÷தொல்.திருமாவளவன்.**

---

# அவள் கண்களில் மறைந்த கவிதை

கண்களின் ஓடையில் கயல்விழி நீந்திட
கண்புருவ இமைகள் கரைகளாய் காத்திட

காண்பதற்கு கருவிழிகள் இடம்வலம் பார்த்திட
கண்பார்வை கடிதமாய் காதலுக்கு தூதுவிட

இமைகள் சிமிட்ட இதயத்தை கவர்ந்திட
இணைக்கும் மனங்களை
பார்வைகள் பாலமிட

கசியும் கண்ணீரை ஆனந்தம் அணைபோட
காந்தமாய் நோக்கியதால் பருவம் பசித்திட
துடித்த கண்களில் தேடுகின்ற விழிகள்
துயரத்துக்கு உதவியாக மூடாத இமைகள்

கவிதைகள் எழுதினேன் கண்களைப் பார்த்து
கண்மூடி திறந்தேன் பறந்தது சிரித்து



**அனைவருக்கும் தை திருநாள் நல்வாழ்த்துகள்**

**சி.சுபாஷ் சந்திர போஸ்** (காவல்துணை கண்காணிப்பாளர் ஓய்வு)




உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் நிகழ்வை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில், நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கலந்து கொண்டார்.**

---





# தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 2.43 லட்சம் மதிப்புள்ள 343 கிலோ புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்த காவல்துறையினர்

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் கஞ்சா ஆகியவற்றின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. றூ.றீ. மாதவன் வீஹறீ., அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(05.01.2026) குற்றாலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இலஞ்சி பகுதியில் சட்டவிரோதமாக புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காவல்துறையினர் திடீர் சோதனை நடத்தியதில் இலஞ்சி ராமசாமி பிள்ளை தெருவை சேர்ந்த மரியதாஸ் என்பவரின் மகன் ரவி ÷ ரவி ராஜ பாண்டியன் (வயது 45) என்பவர் பதுக்கி வைத்திருந்த 343 கிலோ எடை கொண்ட ரூ. 2.53 லட்சம் மதிப்பிலான அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து, ரவியை கைது செய்து, வழக்கு பதிவு செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த உள்ளனர். மேலும் புகையிலை பொருட்கள் எங்கிருந்து வாங்கிவரப்பட்டது குறித்தும், இதில் தொடர்புடையவர்கள் குறித்தும் விசாரித்து








# ’குற்றமில்லா குமரி’யாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகளும் திட்டங்களும் செயல்படுத்தி அசத்தும்.கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை

## ‘Quick Response Team’

**பொதுமக்களின் பிரச்சனைகளை உடனுக்குடன் அணுகவும், குற்றங்களை முன்கூட்டியே தடுப்பதற்கும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால்....**

ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் 360ஏ கேமரா பொருத்தப்பட்ட **Quick Response Team** வாகனங்களின் செயல்பாடு தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### May I help you – QR Scanner

குழந்தைகள் பெண்கள் மற்றும் முதியவர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில் அனைத்து காவல் உதவி எண்கள் அடங்கிய **QR** குறியீடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாவட்டத்தின் அனைத்து ஆட்டோக்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் கல்வி நிலையங்களில் ஒட்டப்பட்டு வருகிறது.இதனை பொதுமக்கள் செல்போன் மூலம் ஸ்கேன் செய்து பயன்படுத்திக் கொள்ள முடியும்.

### Road Safety Club

**ZERO ACCIDENT KUMARI** என்ற இலக்கினை நோக்கி செயல்படும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் **Road Safety Club** என்ற அனைத்து பள்ளி கல்லூரிகள் அடங்கிய மாணவ மாணவியர் அமைப்பை 09-07-2025 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த அமைப்பில் உள்ள மாணவ மாணவிகள் போக்குவரத்து போலீசார் உடன் இணைந்து போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதுடன், மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

**’ஊர் காவல் கண்காணிப்பு திட்டம்’**

இந்தத் திட்டமானது காவல்துறை மற்றும் பொதுமக்கள் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதுடன் கன்னியாகுமரி மாவட்டத்தை

முழுமையான பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரும் வண்ணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் குறிக்கோளான அனைத்து கிராமங்களிலும் CCTV என்ற இலக்கை எட்டுவதற்கும் இந்த திட்டம் வழிவகை செய்துள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தின் கீஊழ் நியமிக்கப்பட்ட காவலர்கள், பொதுமக்களுக்கு காவல்துறை சம்பந்தப்பட்ட உதவிகளை பெற நேரடியாக உதவிபுரிந்து வருகின்றனர். இதுவரை இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் உதவியுடன் மாவட்டம் முழுவதும் சுமார் 1473 **CCTV** கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்து குறிப்பிடத்தக்கது.

**'வெற்றிப்பாதை'**

இளைஞர்களுக்கு சரியான பாதையை வழிகாட்டும் வகையில் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் வெற்றிப்பாதை படிப்பகம் மற்றும் போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி மையம் திறக்கப்பட்டது. இதில் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் வகுப்புகள் நடைபெறுகிறது.

இந்த வெற்றிப்பாதை படிப்பகத்தில் படித்த இளைஞர்கள் பலர் இரண்டாம் நிலை காவலர் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்.மேலும் சார்பு ஆய்வாளர் எழுத்து தேர்வினை சிறப்பாக எழுதி உள்ளனர். தற்போது அவர்களுக்கு உடற்தகுதி தேர்வு தேர்வுக்கான பயிற்சி காலை மாலை என ஆயுதப்படையில் வைத்து நடைபெற்று வருகிறது.

## 'Public Feedback Centre'

பொதுமக்களின் புகார் மனுக்கள் மீதான போலீஸ் விசாரணையின் திருப்தி, பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், சட்டம் ஒழுங்கு போதை பொருட்கள் மற்றும் தற்கொலை முயற்சி தொடர்பான தகவல்களை **7708239100, 6385211224** எண்களில் பகிர்ந்து கொள்ளலாம். பொதுமக்களின் பெயர், விவரங்கள் ரகசியம் காக்கப்படும்.

## 'Tourist Patrol'

கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பிற்காக சுற்றுலா ரோந்தினை (**Tourist Patrol**) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதில் தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகள் தெரிந்த காவலர்கள் பணியமர்த்தப்பட்டு 24 மணி நேரமும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. இத்திட்டம் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

**'குமரி காவலன்'**

உலகில் உள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் இந்தியாவில் உள்ள பல இடங்களில்; இருந்தும் கன்னியாகுமரிக்கு சுற்றுலா வரும் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் நலனுக்காக தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இந்த குமரி காவலன் இயந்திரத்தை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**'குமரிக் காவலன் சிறப்பம்சங்கள்'**

**1. Missing Complaint Assistance (People)Lost items)**

**2. Found object - Good civilian reporting**

**3. Tourist guide information system**

**4. SOS emergency alert**

**5. Comprehensive helpline directory**

**6. Support chat AI**

---



# ஹெல்மெட் அணிந்தால் இலவச வெள்ளி நாணயம்: M.G.R.ரின் அதிரடி

தஞ்சையை திக்குமுக்காட செய்த போலீசார் புத்தாண்டை முன்னிட்டு தஞ்சை பெரியக் கோயிலில் பொதுமக்கள் புத்தாடை அணிந்து குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தனர். ஹெல்மெட் அணிந்து வந்தவர்கள் வெள்ளி நாணாயம் வழங்கிய போக்குவரத்து காவலர்கள்.


# ஆவடி காவல் ஆணையரகம்

# ஆவடி காவல் ஆணையாளராக காவல்துறை கூடுதல் இயக்குனர் திரு.பிரேம் ஆனந்த் சின்ஹா; இ.கா.ப.; அவர்கள் பொறுப்பேற்பு







தமிழ்நாடு காவல்துறையின் தென் மண்டல காவல் துறை தலைவராக (**Inspector General of Police**) பணிபுரிந்து வந்த திரு.பிரேம் ஆனந்த் சின்ஹா, இ.கா.ப., அவர்கள், காவல்துறை கூடுதல் இயக்குனராக (**Additional Director General of Police**) பதவி உயர்வு பெற்று, ஆவடி காவல் ஆணையரகத்தின் நான்காவது புதிய காவல் ஆணையாளராக 01.01.2026-ம் தேதி பதவி ஏற்றுக் கொண்டார்கள். ஆவடி காவல் ஆணையாளராக பதவி ஏற்றத்தை தொடர்ந்து, ஆவடி காவல் ஆணையரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து நிலை காவல் அதிகாரிகளும், மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்

# T1அம்பத்தூரில் காவல் பெண் உதவி ஆய்வாளர் தற்கொலை?

**சென்னை அம்பத்தூர் காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்தவர் அந்தோணி மாதா (30). இவருக்கு கடந்த 2015 ம் ஆண்டு யோவான் என்பவருடன் திருமணமாகி ஹரிஷ் ஜோஸ்வா (10), ஆடன் ஜெபிக் (8) என இரண்டு மகன்கள் உள்ளனர்.**



காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரஞ்சித் குமார் என்பவருடன் பழகி வந்துள்ளார். கருத்து வேறுபாடு காரணமாக கணவரைப் பிரிந்து, அம்பத்தூரையடுத்த சோழபுரம் பகுதியில் வசித்து வந்தார். இந்நிலையில் இரவில் ரஞ்சித்குமாரை வீட்டிற்கு வருமாறு அந்தோணி மாதா அழைத்ததாகவும், அதற்கு ரஞ்சித் மறுத்து விட்டதாகவும் தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த அந்தோணி மாதா ரஞ்சித்குமாருக்கு வீடியோ கால் செய்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள போவதாக மிரட்டியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த ரஞ்சித் குமார் உடனே அம்பத்தூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அந்தோணி மாதா வீட்டிற்கு விரைந்து சென்ற காவல்துறையினர் அங்கு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையிலிருந்த அந்தோணி மாதாவை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

இதனால் அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு முன்னிட்டு மதுரை காவல் ஆணையர்ஆய்வு





தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு, வருகின்ற 15.01.2026-தேதியன்று வரலாற்று சிறப்புமிக்க மதுரை மாநகர் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவதை முன்னிட்டு, மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இன்று (05.01.2026) மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ. லோகநாதன் இ.கா.ப., அவர்கள் அவனியாபுரம் பகுதியில் கள உ மேற்கொண்டார். மாநகர காவல் துணை ஆணையர் (தெற்கு), காவல் துணை ஆணையர் (வடக்கு), காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) மற்றும் காவல் துணை ஆணையர் (ஆயுதப்படை) ஆகியோர் உடனிருந்தனர்.





# கோயம்பேடு பகுதியில் வீட்டில் நுழைந்து நகைகள் மற்றும் பணத்தை திருடிய நபர் கைது. நவரத்தின மோதிரம் மற்றும் ரூ.10,000/– மீட்பு.

**சென்னை, அரும்பாக்கம், ஜெகன்நாதன் நகர் பகுதியில் விமலா, வ/46, க/பெ.நந்தகுமார் என்பவர் கணவர் மற்றும் மகனுடன் வசித்து வருகிறார். இவரது கணவர் இரயில்வேயில் பணிபுரிந்து வருகிறார்.**

கடந்த 09.10.2025 அன்று விமலா குடும்பத்தினர் இரவு வீட்டின் முன் கதவை பூட்டாமல் சாத்தி வைத்து விட்டு படுக்கையறைக்கு சென்று தூங்கியுள்ளனர். மறுநாள் (10.10.2025) அதிகாலை விமலா எழுந்து பக்கத்து அறைக்கு சென்று பார்த்த போது, அடையாளம் தெரியாத நபர் கதவை திறந்து வீட்டிற்குள் நுழைந்து கைப்பையிலிருந்த சுமார் 3 சவரன் தங்கச்செயின், வெள்ளி நகைகள், நவரத்தின மோதிரம் மற்றும் பணம்ரூ.80,000/–ஐ திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து விமலா **K–11 CMBT** காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

**K–11 CMBT** காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர்.ரவி, உதவி ஆய்வாளர்கள் கோபி, முத்து கருப்பசாமி.ஏட்டு சுதர்சன் மற்றும் முருதுபாண்டி தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி முத்துகிருஷ்ணன், வ/36, உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம் என்பவரை




கைது செய்தனர். அவரிடமிருந்து 1 நவரத்தின மோதிரம் மற்றும் பணம் ரூ.10,000/– பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி முத்துகிருஷ்ணன் மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி முத்துகிருஷ்ணன் விசாரணைக்குப் பின்னர் நேற்று (02.01.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.









மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் சட்டம் & ஒழுங்கு சம்பந்தமான கலந்தாய்வு கூட்டம், தமிழக காவல்துறையின் சட்டம் ஒழுங்கு கூடுதல் இயக்குநர் முனைவர். மகேஷ்வர் தயாள், இ.கா.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்தாய்வு கூட்டத்தில் மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் திரு.லோகநாதன் இ.கா.ப., அவர்கள், மாநகர காவல் துணை ஆணையர் (தெற்கு), காவல் துணை ஆணையர் (வடக்கு), காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) மற்றும் காவல் துணை ஆணையர் (ஆயதப்படை) ஆகியோர் கலந்து கொண்டனர்

---



# அதிரடி காட்டும் புதுக்கோட்டை மாநகர காவல் துறை துணை கண்காணிப்பாளராக பிருந்தா(DSP).


புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது மாநகர உட்கோட்டத்தில் நடைபெறும் சட்டம் ஒழுங்கு போதைப் பொருட்கள் நடமாட்டம் மற்றும் பெண்கள் பாதுகாப்பு குறித்த பிரச்சனைகளை கீழ்கண்ட வாட்ஸ் அப்பில் தொடர்பு கொள்ளலாம் 97899 18079 அறிவித்துள்ளார்பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்

# கோவை மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில் உணவு விடுதி



கோவை மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில் காவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் புதியதாக கட்டப்பட்டுள்ள காவலர் உணவு விடுதி 26.12.2025 அன்று திறந்து வைக்கப்ட்டது.இந்த உணவி விடுதி திறப்பு நிகழ்ச்சியில் மேற்கு மண்டல காவல்துறை துணைத் தலைவர் திரு.செந்தில்குமார். இ.கா.ப., அவர்கள் மற்றும் கோவை சரக காவல்துறை துணைத் தலைவர் மரு.**V.**சசிமோகன். இ.கா.ப., அவர்கள் மற்றும் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **Dr.K.**கார்த்திகேயன்.இ.கா.ப., அவர்கள் கலந்து கொண்டனர்.

## தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை



தஞ்சை சரகத்தில் போதைப்பொருட்களுக்கு எதிராக நடத்திய அதிரடி சோதனையில் தஞ்சாவூர்( 344.21 **Kg**), மயிலாடுதுறைன்11.72 **Kg**), நாகப்பட்டினம்(309.4 **Kg**) மற்றும் திருவாரூர்(25.210 **Kg** ) ஆகிய மாவட்டங்களில் பறிமுதல் செய்யப்பட்ட 690.54 கிலோ கஞ்சாவை நீதிமன்ற உத்தரவு பெற்று 29.12.2025 அன்று தஞ்சாவூர் சரக காவல்துறை துணைத் தலைவர் திரு.ஜியாவுல் ஹக் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் திருவையாறு உட்கோட்டம் செங்கிப்பட்டி அருகே அயோத்திப்பட்டியில் உள்ள **Medi Care Enviro System** என்ற நிறுவனத்தில் போதைப்பொருட்களை தீயிட்டு அழிக்கும் நிகழ்வானது நடைபெற்றது.இந்நிகழ்வில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.வீரபாண்டி அவர்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு -வல்லம் உட்கோட்டம் ) திருமதி.காயத்ரி,மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழக மக்களின் மனம் கவர்ந்த முதல்வர் ஸ்டாலின்,மகளிர் உரிமை தொகையுடன், பொங்கல் பரிசு ரூ3.000, அரசு ஊழியர்களுக்கு புதிய பென்சன் திட்டம், மாணவர்களுக்கு லேப்டாப், திமுக வெற்றிக்கு பரிசா!!!

**சென்னை: தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், ஆளும் திமுக அரசு தனது தேர்தல் வியூகங்களை வகுப்பதில் தீவிரம் காட்டி வருகிறது. வரிசையாக முக்கியமான நலத்திட்டங்களை, அறிவிப்புகளை தமிழக அரசு வெளியிட்டு வருகிறது.**



**பென்சன் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்காகப் புதிய உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (TAPS) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சனிக்கிழமை (ஜனவரி 3, 2026) அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்படி, மாநில அரசு ஊழியர்களுக்கு அவர்களின் கடைசி அடிப்படை ஊதியத்தில் 50% உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும்.

கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி தலைமையிலான மூவர் ஓய்வூதியக் குழுவின் அறிக்கை அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இக்குழு, பல்வேறு ஓய்வூதியத் திட்டங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டுக்கு ஏற்ற புதிய மாதிரித் திட்டத்தை பரிந்துரைத்திருந்தது.

TAPS திட்டத்தின்கீழ், ஊழியர்கள் தங்கள் அடிப்படை ஊதியத்தில் 10% ஓய்வூதிய நிதிக்கு செலுத்த வேண்டும். கூடுதல் நிதித் தேவையை மாநில அரசே ஏற்கும். இத்திட்டத்தால், ஓய்வூதிய நிதிக்கு ₹13,000 கோடி கூடுதல் செலவு அரசுக்கு உடனடியாக ஏற்படும்.

பணியில் உள்ள அரசு ஊழியர்களுக்கு இணையாக ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுக்கு இருமுறை அகவிலைப்படி உயர்வு உண்டு. ஒரு ஓய்வூதியதாரர் மரணமடைந்தால், அவர் பெற்றுவந்த ஓய்வூதியத்தில் 60% குடும்ப ஓய்வூதியமாகப் பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளுக்குக் கிடைக்கும். ஓய்வு அல்லது பணி மரணத்தின்போது, சேவை காலத்தின் அடிப்படையில் அதிகபட்சமாக ₹25 லட்சம் பணிக்கொடை வழங்கப்படும்.

தகுதிச் சேவைக்காலம் நிறைவு செய்யாதவர்களுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும். பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (CPS) சேர்ந்து, TAPS அமலுக்கு முன்னர் ஓய்வூதியம் பெறாமல் ஓய்வு பெற்றவர்களுக்கு 'சிறப்பு கருணை ஓய்வூதியம் உண்டு. மேலும், ஆண்டுதோறும் சுமார் ₹11,000 கோடி அரசு பங்களிக்க வேண்டும், இது ஊழியர்களின் ஊதியத்தைப் பொறுத்து அதிகரிக்கக்கூடும்.

**கலைஞர் மகளிர் உரிமை தொகை** விரிவாக்கம் இதேபோல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், தமிழ்நாட்டில் உள்ள தகுதியுள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நிதி உதவியை வழங்குகிறது. இந்த

நொடியில் தமிழ்நாட்டில் இரண்டு கோடி பேர் வரை இந்த திட்டம் மூலம் நேரடியாக நிதி பெறுகிறார்கள். முன்னதாக நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில், ஏராளமான பெண்கள் இத்திட்டத்திற்காக விண்ணப்பித்திருந்தனர். அங்கு அதிகாரிகள் விண்ணப்பங்களைப் பெற்று தகுதியை சரிபார்த்தனர். இந்த முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களை அதிகாரிகள் தீவிரமாக ஆய்வு செய்தனர். ஆவணங்கள், வருமான விவரங்கள் மற்றும் குடும்ப நிலையை கவனமாக சரிபார்த்து, தகுதியான பயனாளிகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்தனர். இந்த விரிவான சரிபார்ப்புக்குப் பிறகு, புதிதாக தகுதியானோர் பட்டியலை தமிழக அரசு இறுதி செய்தது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, அவர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்களுக்குக் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டன. அதன்படி கூடுதல் மகளிருக்கு கடந்த டிசம்பரில் இருந்து பணம் அனுப்பப்பட்டு வருகிறது

## பொங்கல் பரிசு

முதல்வர் மு.க.ஸ்டாலின், பொங்கல் திருநாளை முன்னிட்டு, அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு சிறப்புப் பரிசு வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தொகுப்பில் ₹3,000 ரொக்கம், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு நீளக் கரும்பு, வேட்டி மற்றும் சேலைகள் ஆகியவை அடங்கும். இவை அனைத்து நியாயவிலைக் கடைகள் மூலம் பொங்கலுக்கு முன்பாக விநியோகிக்கப்படும். அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் இருப்பவர்களுக்கு இந்த பரிசு வழங்கப்படும்.

எப்படி பொங்கல் பரிசு வாங்குவது என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். இது மிகவும் எளிமையானதே. உங்களுக்கு ஒரு டோக்கன் ரேஷன் கார்டு அடிப்படையில் நாளை முதல் வழங்கப்படும். டோக்கன் கிடைத்தவர்கள் அதை காட்டி ரேஷன் கடைகளில் பொருட்கள் மற்றும் பணத்தை வாங்கிக்கொள்ளலாம்..

பொங்கல் பரிசு தொகுப்பு தொடர்பாக டோக்கன் அச்சடிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த டோக்கனில் முக்கியமான விவரங்கள் இடம்பெற்று உள்ளன. தமிழ்நாட்டில் 2 கோடியே 22 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்க தமிழக அரசு திட்டமிட்டு உள்ளது. பச்சரிசி, வெல்லம், ஏலக்காய், முந்திரி, திராட்சை, நெய் உள்ளிட்டவை பரிசுத் தொகுப்பில் இடம்பெறுகிறது.

## சர்வே எடுக்கும் ஸ்டாலின்

இப்படி தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், ஆளும் திமுக அரசு தனது தேர்தல் வியூகங்களை வகுப்பதில் தீவிரம் காட்டி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, உளவுத்துறை மூலம் ஐந்து கட்டங்களாக ஒரு விரிவான கருத்துக்கணிப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளது. கட்சி வட்டாரங்கள் இந்த முக்கியமான தகவலை உறுதிப்படுத்தியுள்ளன.

சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக, ஆளும் கட்சிகள் இதுபோன்ற உளவுத்துறை ஆய்வுகளை மேற்கொள்வது பொதுவான ஒரு நடைமுறையாகும். இதன் முக்கிய நோக்கம், தங்கள் கட்சிக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் சாதகமான தொகுதிகளுடன், சவால்களை எதிர்கொள்ள வேண்டிய பலவீனமான பகுதிகளையும் துல்லியமாக அடையாளம் காண்பதுதான். இதன்மூலம், தேர்தல் உத்திகளை வகுக்க ஒரு தெளிவான புரிதலைப் பெற முடியும்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற விழாவில், கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் உலகம் உங்கள் கையில் என்ற பிரம்மாண்ட திட்டத்தைத் தொடங்கி வைத்தார். சுமார் 20 லட்சம் மாணவர்களுக்குப் பயன் தரும் இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 10 லட்சம் மடிக்கணினிகள் விநியோகம் செய்யும் பணியை அவர் தொடங்கி வைத்தார். விழாவில் பேசிய முதல்வர், இந்த லேப்டாப் ஒன்றும் வெறும் பரிசுப்பொருள் அல்ல, இது நீங்கள் உலகத்தை ஆள்வதற்காகத் தரப்பட்டுள்ள ஒரு வலிமையான கருவி என்று மாணவர்களை உற்சாகப்படுத்தினார். மேலும், மாணவர்கள் இந்த மடிக்கணினியை வெறும் கேம்ஸ் விளையாடுவதற்கோ அல்லது பொழுதுபோக்கிற்காகப் படம் பார்ப்பதற்கோ பயன்படுத்தாமல், தங்களது எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு ஏவுதளமாக (Launch Pad) பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். செயற்கை நுண்ணறிவு (AI) என்பது நெருப்பின் கண்டுபிடிப்புக்கு இணையான மனிதகுலத்தின் மிகப்பெரிய முன்னேற்றம். அது மனிதர்களுக்கு உதவியாக இருக்குமே தவிர, ஒருபோதும் மனிதனை ரீப்ளேஸ் (Replace) செய்ய முடியாது என்று கூறிய முதல்வர், மாணவர்கள் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுத் தங்களை மெருகேற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். கல்விக்காகச் செய்யப்படும் இந்தச் செலவை அரசு ஒரு செலவாகப் பார்க்காமல், எதிர்காலத் தலைமுறைக்கான முதலீடாகவே பார்க்கிறது என்றும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



**இந்தியாவில் சிறப்புமிக்க ஆட்சி தலைவர்களில் ஒருவராய் தமிழ்நாட்டில் தன்னிகரற்ற ஒருவராய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தஞ்சை மண்ணின் வீரமங்கை எங்கள் மாவட்ட ஆட்சியர் திருமதி.பிரியங்கா பங்கஜம் அவர்களுக்கு நீதியின் நுண்ணறிவு பத்திரிகை சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.**



தஞ்சாவூர் மாநகராட்சி வடக்கு வாசல் சிரேயஸ் சத்திரம் அன்பாலயம் மனநல காப்பகத்தில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ வசதி மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப அவர்கள் இன்று (02.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து புத்தாண்டினை முன்னிட்டு இணிப்புகளை வழங்கினார்கள். வருவாய் கோட்டாட்சியர் செல்வி.நித்யா அவர்கள், வட்டாட்சியர் திரு.சிவக்குமார் அவர்கள், சத்திரம் வட்டாட்சியர் திரு.சக்திவேல் அவர்கள், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.நமச்சிவாயம் அவர்கள் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



**G.S.மாதவன் IPS அவர்கள் தென்காசி மாவட்ட புதிய காவல் கண்காணிப்பாளராக நியமனம்.... அவர் பணி சிறக்க நிதியின் நுண்ணறிவு பத்திரிகையின் சார்பாக வாழ்த்துகின்றோம்.**



---

## உதகை சட்டமன்ற நடைபெற்று வந்த சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில்ஆய்வு



நீலகிரி மாவட்டம், 108 – உதகை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உதகை நகராட்சி ஹோபார்ட் நடுநிலைப்பள்ளி வாக்கு சாவடி மையத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பணிகளுக்காக நடைபெற்று வந்த சிறப்பு முகாமினை, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நேரில் பார்வையிட்டார்.

# ஆயுதத்துடன் ரீல்ஸ் வெளியிடுவோர் கண்காணிப்பு கந்துவட்டி, பொருளாதார மோசடிகள் தடுக்கப்படும் புதிய தென் மண்டல ஐஜி தகவல்



**கந்துவட்டி, பொருளாதார மோசடி உள்ளிட்ட குற்றங்களை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக் கப்படும் என்று, புதிதாக பொறுப்பேற்ற தென் மண் டல போலீஸ் ஐஜி விஜயேந் திர பிதாரி கூறியுள்ளார்.**

தென்மண்டல போலீஸ் ஐஜியாக விஜயேந்திர பிதாரி மதுரையில் உள்ள அலுவலகத்தில் நேற்று பொறுப்பேற்றார். பின்னர் அவர். மதுரை சரகடிஐஜி அபினவ்குமார், எஸ்பிக்கள். அரவிந்த் (மதுரை), கண்ணன் (விருதுநகர்), சினேகாப்ரியா (தேனி), பிரதீப் (திண்டுக்கல்). சிவபிரசாத் (சிவகங்கை), சந்தீஷ் (ராமநாதபுரம்), சிலம்பரசன் (தூத்துக்குடி), பிரசன்னகுமார் (நெல்லை), மாதவன் (தென்காசி), ஸ்டாலின் (கன்னியாகுமரி) ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் தென்மண்டல ஐஜி விஜயேந்திர பிதாரி கூறியதாவது:

தென் மண்டலத்தில் உள்ள மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது. குற்றச்சம்பவங்களை குறைப்பது குறித்து, அனைத்து மாவட்ட போலீஸ் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. கந்துவட்டி, போதைப்பொருள் விற்பனை, மணல் கொள்ளை போன்றவற்றை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். வழக்குகளில் விரைவாக குற்றப்பத் திரிகை தாக்கல் செய்து நீதிமன்றம் மூலமாக குற்ற வாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். பெண்கள், குழந்தைகள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து சைபர் க்ரைம், பொருளா தார மோசடி போன்ற

புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். போதைப்பொருட்கள் விற்பனையை தடுக்க புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். அனைத்து காவல் நிலையங்களிலும், உயரதிகாரிகள் நேரடி ஆய்வு நடத்துவர். அதிகஎண்ணிக்கையில் வழக்குகள் பதிவாகும் காவல் நிலையங்களின் எல்லை பகுதியில் குற்றங்களை குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன், அவை மாதிரி காவல் நிலையங்களாக மாற்றப்படும். சட்டத்தை மீறும் காவல் துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு மன்னிப்பு என்பதே கிடையாது. மேலும், சமூக வலைத்தளங்களில் ஆயுதங்களுடன் 'ரீல்ஸ்' வெளியிடுவதை தடுக்க, தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். கஞ்சா வழக்குகளில் தண்டனை பெறுவோரின் சொத்துக்களை பறிமுதல் செய்வது தொடர்பாக, சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார்.

# தமிழ்நாட்டில் கடந்த 2025ம் ஆண்டில் லஞ்சம்வாங்கியதாக 229 அரசு அதிகாரிகள் கைது 2024ம் ஆண்டைவிட 117 வழக்குகள் அதிகம்



**தமிழ்நாட்டில் கடந்த 2025ம் ஆண்டில் லஞ்சம் வாங்கியதாக 229 அரசு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ள தாக அதிகாரிகள் தெரி வித்தனர்.**

தமிழ்நாட்டில் மின் வாரியம், ஊராட்சி ஒன் றியம் அலுவலகம், ஆர்டிஓ அலுவலகம், மாவட்ட முதன்மை கல்வி துறை, கருவூலம், பத்திரப்பதிவு, வருவாய், வேளாண். காவல், வணிகவரித்துறை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, தொழில் நலத்துறை அலுவலகம், சர்வே. தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகரமைப்பு அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவ லங்கள் மூலம் மக்களுக்கு தேவையான அரசின் திட்டங்கள் பெறுவதற்கு விண் ணப்பித்து வருகின்றனர்.

கள், சாலை அதே போல், அரசு கட்டிடங் உள்ளிட்ட பணிகளுக்கு பில் பாஸ் செய்வ தற்கு மற்றும் பொதுமக்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் கிடைப்பதற் கும் அரசு அதிகாரிகள் லஞ்சமாக பணத்தை பெற்று கொண்டு பில் பாஸ் செய்வதாக குற்றச் சாட்டு எழுந்தது. இதை தடுக்கும் வகையில், தமிழ் நாட்டில் லஞ்ச ஒழிப்பு போலீஸ் என்ற பிரிவு உரு வாக்கப்பட்டு, நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு லஞ்சம் வாங்கும் அரசு அதிகாரிகளை கையாளும் களவுமாக பிடித்து,

கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவ டிக்கை சஸ் பெண்ட் செய்யப் பட்டு வரு கின்றனர். இந்நிலையில், தமிழ் நாட்டில் கடந்த 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் டிசம்பர் 31ம்தேதி நிலவரப்படி, லஞ்ச ஒழிப்பு போலீசார் 391 வழக்குகள் பதிவு செய்துள்ளனர். இதில் 229 வழக்குகளில் லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாக பிடிக்கப்பட்ட 229 அரசு அதி காரிகள் கைது செய்யப்பட்டனர். மேலும், அரசுதிட்டப்பணிகளில் முறை கேடு, அலுவலகங்களில் கணக்கில் வராத பணம் பறிமுதல் என 162 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் தமிழ்நாட் டில், கடந்த 2024ம் ஆண்டு லஞ்ச ஒழிப்பு போலீசார் 274 வழக்குகள் பதிவு செய் துள்ளனர். இதில் 148 வழக் குகளில் லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாக பிடிபட்டுள்ளனர். மேலும், அரசு திட்டப்பணிகளில் முறைகேடு, அலுவலகங் களில் கணக்கில் வராத பணம் பறிமுதல் என 126 வழக்குகள் பதிவு செய் யப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 2025ம் ஆண்டு 117 வழக்குகள் அதிகரித்து, 391 வழக்குகள் பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் கூறு கையில், 'தமிழ்நாட்டில் கடந்த 2025ம் ஆண்டு லஞ்சம் வாங்கியதாக 229 அரசு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். மேலும் அரசு பணிகளில் முறைகேடு, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்ப்பது உள்ளிட்டவை 162 வழக்குகள் என மொத் தம் 391 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக கோவை, ராமநாதபுரம் மாவட்டங்களில் லஞ்சம் வாங்கியது, முறைகேடு, வருமானத்துறை அதிக மாக சொத்து குவிப்பு உள்ளிட்ட 24 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள் எது. வருமானத்திற்கு அதி சுமாக சொத்து இருந்தால், அவற்றை பறிமுதல் செய் வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றனர்.

## மாவட்டம் வாரியாக வழக்கில் சிக்கிய அதிகாரிகள் எண்ணிக்கை

காஞ்சிபுரம் 4, திருவள்ளூர் 10, வேலூர் 4. கடலூர் 7. விழுப்புரம் 8, திருவண்ணா மலை 6. செங்கல்பட்டு 6, திருப்பத்தூர் 3. ராணிப்பேட்டை 3. கள்ளக்குறிச்சி 2, திருச்சி 11,கரூர் 4, பெரம்பலூர் 4, அரிய லூர் 4, புதுக்கோட்டை 3. தஞ்சாவூர் 3. நாகப்பட்டினம் 2, திருவாரூர் 2, மயிலாடு துறை 2, மதுரை 12, விருதுநகர் 5, தேனி 2, தூத்துக்குடி 4. ராமநாதபுரம் 14. சிவகங்கை 5. திண்டுக்கல் 11, கன்னியாகுமரி 8, திரு நெல்வேலி 3, தென்காசி 6, கோவை 11, திருப்பூர் 9, ஈரோடு 5, நீலகிரி 1, சேலம் 13, தர்மபுரி 5, கிருஷ்ணகிரி 15, நாமக்கல் 5. சென்னை சிட்டி 6, சிட்டி ஸ்பெஷல் யூனிட் 1 என மொத்தம் 229 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அரசு அதிகாரிகள் கையும் களவுமாக பிடிப்பட்டனர்.

அதேபோல் முறைகேடுகள், கணக்கில் வராத பணம் பறிமுதல், வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்தது உள்ளிட் டவை சம்பந்தமாக காஞ்சிபுரம் 3. திருவள் ளூர் 8, வேலூர் 0, கடலூர் 6, விழுப்புரம் 4. திருவண்ணாமலை 4. செங்கல்பட்டு 5. திருப்பத்தூர் 3. ராணிப்பேட்டை 2, கள்ளக் குறிச்சி 3. திருச்சி 6, கரூர் 2, பெரம்பலூர் 1. அரியலூர் 1, புதுக்கோட்டை 3, தஞ்சா வூர் 5. நாகப்பட்டினம் 2, திருவாரூர் 2, மயிலாடுதுறை 0. மதுரை 6. விருதுநகர் கோவை 13, திருப்பூர் 2, ஈரோடு 4. நீலகிரி 3, சேலம் 6, தர்மபுரி 1, கிருஷ்ணகிரி 4, நாமக்கல் 2, சென்னை சிட்டி 5, சிட்டி ஸ்பெஷல் யூனிட் 5, சிறப்பு புலனாய்வுப் பிரிவு ஒன்றில் 5 வழக்குகள் என மொத்தம் 7, தேனி 1, தூத்துக்குடி 7. ராமநாதபுரம் 10, சிவகங்கை 4. திண்டுக்கல் 5. கன்னி யாகுமரி 5, திருநெல்வேலி 5, தென்காசி 2. 162 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

---



# சீர்காழி அருகே செம்மங்குடி ஊராட்சியில் பொது விநியோக கடையினை சீரமைக்க கோரிக்கை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே செம்மங்குடி ஊராட்சியில் பொது விநியோக கடை இடிந்து கீழே விழும் அபாயமான நிலையில் கடையின் மேற்கூரை சேதமடைந்து மழை நீர் கசிவு ஏற்படுவதால் பாலித்தீன் தார்பாய்களை கொண்டு மேற்கூரை மூடப்பட்டுள்ளது. இதனால் கடையில் வழங்கப்படும் அரிசி, போன்ற வீணாகுவதாக மற்றும். தெரிவிக்கின்றனர்.சக்கரை, கோதுமை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உணவுப் பொருட்கள் நேரில் ஆய்வு செய்து ஆபத்தான அப்பகுதி மக்கள் நிலையில் உள்ள செம்மங்குடி சமூக ஆர்வலர்கள் ஊராட்சி பொது விநியோக எனவே கடையினை சீரமைக்க நடவடிக்கை வேண்டும் என்று அப்பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர் ஸ்டாலின் மற்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# ரயில்வே மேம்பாலப் பணிகளால் சாலைகளில் ஆக்கிரிமிப்பு கடும் போக்குவரத்து நெரிசலால், தென்காசி பகுதி மக்கள் பெரும் அவதி தீர்வு காண்பது எப்போது?




**இந்திய இரயில்வே பல் வேறு வளர்ச்சி பணிகளை தமிழகத்தில் மேற்க்கொண்டு வருகிறது,அதிலும், ரயில்வே தண்டவாள பகுதியை கடக்கும் போக்குவரத்து அதிகம் உள்ள இடத்தில் புதிய மேம்பாலம் கட்டுதல், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் சிறிய வகை ரயில் நிலையங்களை தரம் உயர்த்தி மேம்படுத்தி வருகின்றனர்,அந்த வகையில் தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றாலம் செங்கோட்டை மற்றும் கேரள மாநிலத்தை இணைக்கும் முக்கிய பாதையான குத்துக்கல் வலசை இலஞ்சி இடையிலான ரயில்வே மேம்பாலப் பணிகள் கடந்த பல ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதால், நாள்தோறும் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.**

இந்த மேம்பாலப் பணிகள் தாமதம் காரணமாக, குற்றாலம் பகுதியில் இருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகள், அவசர சிகிச்சை பெற உரிய நேரத்தில் மருத்துவமனை செல்ல முடியாமல் தவித்து வருவதாக ஒவ்வொரு நாளும் காண முடிகிறது, இதனால் அவசர சிகிச்சை பெற வரும் நோயாளிகள் உயிரிழக்க நேரிடுகிறது என பொதுமக்கள் குற்றச்சாட்டுகின்றனர்

. குறிப்பாக, அவசர நிலைகளில், நோயாளிகளின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சூழல் உருவாகியுள்ளதாகவும், இதில் பேறுகால காலத்தில் பெண்கள் மருத்துவமனைக்கு வாகனத்தில் வரும் வழியிலே, மருத்துவர்கள் இல்லாமல் குழந்தை பெறும் அவல நிலை உள்ளதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மேலும், சபரிமலை செல்லும் சீசன் என்பதால் ஐயப்ப பக்தர்கள் அதிக அளவில் தென்காசி வழியாக வாகனங்களில் பயணம் செய்து வருவதால், மாவட்டம் முழுவதும் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவி வருகிறது. இதனை கட்டுப்படுத்த போதிய போக்குவரத்து காவலர்கள் நியமிக்கப்படாததால், வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.கிருஸ்துமஸ், புத்தாண்டு என தொடர் விடுமுறை காலம் முடிந்து பள்ளி, கல்லூரி திறப்பதால் இந்த பாதையை கடக்கும் பள்ளி, கல்லூரி வாகனங்கள் மற்றும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இரு சக்கரவாகனத்தில் அழைத்து சென்று வரும் போது பெரிதும் நாள்தோறும் அவதி படுவதாக குற்றம் சாட்டி வருகின்றனர் மேலும் தென்காசி நகரில் வாகனங்களை நிறுத்துவதற்கான உரிய இடங்கள் இல்லாததால், சாலையின் இருபுறங்களிலும் இடையூறாக வாகனங்களை நிறுத்தி செல்வது வழக்கமாகியுள்ளது. இதனால் வாகன போக்குவரத்து சாலைகள் சுருங்கி,வாகனங்கள் வரிசை கட்டி வருவதால் போக்குவரத்து நெரிசல் அதிகரிக்கிறது.

மேலும்,புதியதாக பிரிக்க பட்ட மாவட்டம் என்பதாலும், விவசாயம், தொழில்களை மேம்படுத்த அரசு முனைப்பு காட்டி வரும் நிலையில் பொதுமக்கள் நாள்தோறும் வாகன நெரிசலில் சிக்கி தவித்து வருவதை காணும் போது தென்காசி நகராட்சி நிர்வாகமும் செய்வது அறியாது விழிபிதிங்கி நிர்கிறது, இதனிடையே வளர்ந்து வரும் மாவட்டமாக உள்ள தென்காசியில் கட்டிடப் பணிகள் அதிகரித்து வரும் நிலையில், குத்துக்கல் வலசை மதுரை தேசிய நெடுஞ்சாலை பகுதியில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. இதனை போக்குவரத்து காவல்துறை கண்டுகொள்ளாமல் இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். பலமுறை மாவட்ட ஆட்சியருக்கும், போக்குவரத்து காவல்துறைக்கும் மனுக்கள் அளித்தும், இதுவரை எந்த பயனும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர், போக்குவரத்து காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் இவ்வழியாக தினமும் பயணம் செய்தும், நிலவும் பிரச்சனைகளை கண்டுகொள்ளவில்லை. எனவே, நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை நிர்வாகங்கள் இணைந்து, ரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவாக முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். மேலும், போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி அதனை சீர்செய்து, வாகனங்கள் சாலையில் தடையின்றி சென்று வர வேண்டும் என வாகன ஓட்டிகளுடன் பொதுமக்களும் வலியுறுத்தி சம்மந்தப்பட்ட அரசு துறைகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்காசி மக்களை காக்க, சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றியும் , ரயில்வே மேம்பாலம் பணிகள் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்படுத்திடும் வகையில் துரிதமாக தென்காசி மாவட்டம் நிர்வாகம் செயல் படுமா என கேள்வி எழுப்பி வருகின்றனர்

---



**காவல்துறை அமலாக்க பணியகம் ஏடிஜிபியாக இருந்த அமல்ராஜ் தாம்பரம் காவல் ஆணையராக இரண்டாவது முறையாக பதவி ஏற்கிறார். சிறந்த பண் முகம் கொண்டவர்,அவர் பணி சிறப்பாக நடைபெற நீதியின் நுண்ணறவு பத்திரிகையின் சார்பாக வாழ்த்துகள்**

அனைவருக்கும் இனிய **புத்தாண்டு** 2026

மற்றும் **பொங்கல்** நல்வாழ்த்துகள்

TPMPRA

## தமிழ்நாடு – புதுச்சேரி

# மீடியா & பத்திரிகை

## நிருபர்கள் சங்கம்

Regd No., 280/2011 isrmedia1@gmail.com / pontimesrep@gmail.com

கௌரவத் தலைவர்: **S.ராஜவேல்**

கௌரவ ஆலோசகர்: **S.A.அஜீஸ்**



மனசு **சு. காதர் உசேன்**
மாநில தலைவர்



**B.முரளிதரன்**
மாநில பொதுச்செயலாளர்
(தமிழ்நாடு)



**D.சிவக்குமார்**
மாநில பொதுச்செயலாளர்
(புதுச்சேரி)



R.ரவி
மாநில செய்தி தொடர்பாளர்



திருச்சி டாக்டர்
**M.K.முருகன்**
துணை ஆசிரியர்
உள்ளாட்சிடுடே வார இதழ்
மாநில துணைத் தலைவர்



**T.சீனிவாசன்**
பொருளாளர்



**மனோ சௌந்தர்**
துணை செயலாளர்



**R.சிவக்குமார்**
துணை செயலாளர்

மாநில அமைப்பு செயலாளர்கள்:

**L.இந்திரசேனா, C.சந்திரகுமார், S.செந்தில் குமரன், S.டில்லிபாபு, S.யோகதாஸ் ராஜா, M.ஜீவா, R.செந்தில்நாதான், B.வெங்கடேசன், J.ஜலால் முஹம்மது, V.சவிதா வீரமணி, B.விசாகபதி, S.அமுதா**

**K.பாரதிராஜா**

**முகவரி: 123, 2வது மாடி, லிங்கி செட்டி தெரு, மண்ணடி, பாரீஸ், சென்னை – 600001.**

**செல்: 9884728971, 9444455677, 9781186161, 7667726832, 8667676961**

# விழுப்புரம் மாவட்டத்தில் (30.12.2025) அன்று மூன்றாவது கண் திறந்து வைத்து (01.01.2026) அன்று திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவராக பதவி ஏற்ற திரு. ப. சரவணன், இ.கா.ப., அவர்கள்.




## 100 CCTV கண்காணிப்பு கேமராக்களால் காவல்துறையின் தொடர் கண்காணிப்பின் கீழ் வந்த விழுப்புரம் நகரம்.

விழுப்புரம் நகரத்தில் குற்ற சம்பவங்களை தடுக்கவும், குற்றவாளிகளை அடையாளம் காணவும், வாகன ஓட்டிகளை கண்காணிக்கவும், மூன்றாம் கண் எனப்படும் CCTV கண்காணிப்பு கேமராக்கள், விழுப்புரம் மாம்பழப்பட்டு சாலை இந்திரா நகரிலிருந்து மேற்கு காவல் நிலைய நான்கு முனை சந்திப்பு, விழுப்புரம் பழைய பேருந்து நிலையம், ரயில் நிலையம், பானாம்பட்டு சந்திப்பு வழியாக கோலியனூர் – கும்பகோணம் சாலை நான்கு முனை சந்திப்பு வரை (10KM), விழுப்புரம் அண்ணாமலை ஹோட்டல் புறவழிச்சாலையிலிருந்து புதிய பேருந்து நிலையம், தந்தை பெரியார் நகர் வழியாக ஜானகிபுரம் புறவழிச்சாலை வரை (8KM), மொத்தம் 18 லுனி தொலைவில் 14 அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட CCTV கேமராக்கள் உட்பட 100 CCTV கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகரத்தில் நடைபெறும் சம்பவங்களை தொடர்ந்து கண்காணிக்க மேற்கண்ட இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள CCTV கண்காணிப்பு காவல் கட்டுப்பாட்டு அறையில் மாவட்ட காவல் துறையினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட உள்ளது. 30.12.2025 அன்று CCTV கண்காணிப்பு காவல் கட்டுப்பாட்டு அறை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு.ஷேக் அப்துல்ரகுமான்,IAS., அவர்கள், விழுப்புரம் சரக காவல்துறை துணைத் தலைவர் திருமதி.E.S.உமா,IPS., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.P.சரவணன்,IPS., ஆகியோர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது. விழுப்புரம் நகரத்தை 24 மணி நேர CCTV கண்காணிப்பு நகரமாக மாற்ற காவல் துறைக்கு உறுதுணையாக இருந்த மகாலட்சுமி குழுமத்தினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நினைவு பரிசு வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு.தினகரன், திரு.இளமுருகன் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.







சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள தனியார் கார்ப்ரேட் கம்பெனியில் பொறுப்பு பாதுகாப்பு அதிகாரியாக உள்ள, தமிழ்நாடு காவல் துறையில் தலைமை அதிகாரி (IG) யாக இருந்து பணி ஓய்வு பெற்ற அன்புக்குரியவர், **திரு.MS.முத்துசாமி.IPS**, அவர்களுக்கு,காவல்துறையில் மக்கள் சேவை புரிந்தமைக்காக, நீதியின் நுண்ணறிவு புலனாய்வு இதழின் ஆறாம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் மக்கள்ல்காவலர் விருது வழங்கி கௌரவித்தோம், உடன் நீதியின் நுண்ணறிவு புலனாய்வு இதழ் ஆசிரியர் திரு.**R**.சிவகுமார், இணை ஆசிரியர் திரு **J**.கணேசபாண்டி,மற்றும் **SR**.சீனிவாசன், ஆகிய நானும் வழங்கி பாராட்டி மகிழ்ந்தோம்,



# நேர்மைக்கு பாராட்டு

சாலையில் கிடந்த 40 சவரன் நகை,200 கிராம் வெள்ளியை திருநள்ளாறு காவல் நிலையத்தில் ஒப்படைத்த இளைஞருக்கு காவல்துறையினர் பாராட்டு காரைக்காலில் ஓட்டுநராக உள்ள நாகை மாவட்ட உத்தூரைச் சேர்ந்த ஓட்டுநர் மணிவண்ணன் (30) காரைக்கால் வாரச்சந்தையில் சாலையோரம் கிடந்த பையை குறைதீர்கூட்டத்தில் ஒப்படைத்தார்.

# மகாத்மா காந்தி பெயர் நீக்கம்...
# 100 நாள் வேலை திட்டத்தில் வலுக்கும் சர்ச்சை



**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மாற்றத்திற்கு எதிராக தற்போது இந்தியா முழுவதும் சர்ச்சைகள் வெடித்து வருகின்றன. பயிர்காலம் அல்லாத நேரங்களில் இந்திய கிராமப்புறங்களுக்கு பேருதவியாக இருந்து வருவது இந்த '100 நாள் வேலை திட்டம்'.**

திட்டம் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டது. இது இப்போது வரை காங்கிரஸ் ஆட்சியின் டாப் திட்டம் ஆகும்.

இந்தத் திட்டத்தை மாற்றி புதிய மசோதா ஒன்றை கொண்டு வந்துள்ளது மத்திய அரசு. அதன் படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பதை மாற்றி, 'வளர்ந்த பாரத வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார ஊரக உறுதியளிப்புச் சட்டம்' என்று பெயரிடப்பட உள்ளது. இதற்கு இப்போது இந்தியா முழுவதும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இது சம்பந்தமாக தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், 'மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

தேசத்தந்தை காந்தியடிகளின் மீதுள்ள வன்மத்தால் அவர் பெயரைத் தூக்கிவிட்டு, வாயில் நுழையாத வடமொழிப் பெயரைத் திணித்திருக்கிறார்கள்!

100% ஒன்றிய அரசின் நிதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்துக்கு இனி 60% மட்டுமே நிதி ஒதுக்குவார்களாம்! இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டிலேயே வறுமையை முழுமையாக ஒழித்துச் சாதனை படைத்துள்ளதற்காகவே நம் தமிழ்நாடு தண்டிக்கப்படவுள்ளது! வறுமை இல்லாத மாநிலம் என்பதற்காக, இருப்பதிலேயே குறைவாகத்தான் இத்திட்டத்தின் பயன்கள் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்குமாம்!



பல கோடிப் பேரை வறுமையின் பிடியில் இருந்து மீட்டு, மாண்புடன் வாழ வழிவகுத்த ஒரு திட்டத்தை ஆணவத்துடன் அழிக்கப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு!

எப்படி மூன்று வேளாண் சட்டங்கள், சாதி கணக்கெடுப்பு போன்றவற்றில் பின்வாங்கினீர்களோ, அதேபோல மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைச் சிதைக்கும் முயற்சியிலும் மக்கள் உங்களை நிச்சயம் பின்வாங்க வைப்பார்கள்! எனவே, மக்களின் சீற்றத்துக்கு ஆளாகாமல் இப்போதே வளர்ந்த பாரத வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார ஊரக உறுதியளிப்புத் திட்டத்தைக் கைவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்!' என பதிவிட்டுள்ளார்.

2008-ம் ஆண்டு முதல், இந்தியா முழுவதும் அமலுக்கு வந்தது இந்தத் திட்டம். இந்தத் திட்டத்தை 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்' என்று கூறுவதை விட, '100 நான் வேலை திட்டம்' என்றால் தான் அனைவருக்கும் தெரியும். இந்தத் திட்டம் பல கிராமப்புறவாசிகளுக்கு குறிப்பாக பெண்களுக்கு வாழ்வாதாரமாக இருந்து வருகிறது.

இப்போது இந்தத் திட்டத்தை மாற்றி புதிய மசோதா ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது மத்திய அரசு. அவை.. 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்கிற பெயர் 'வளர்ந்த பாரத வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார ஊரக உறுதியளிப்புச் சட்டம்' என்று மாற்றப்பட்டுள்ளது.


இந்தத் திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை என்பது 125 நாள் வேலையாக உயர்த்தப்ப இருக்கிறது. இப்போதிருக்கும் திட்டத்தி படி, இந்தத் தொழிலாளர்களுக்கா ஊதியத்தை மத்திய அரசே முழுக்க முழுக் ஏற்றுக்கொள்ளும்.

ஆனால், புதிய மசோதாப்படி, இந்தத் தொழிலாளர்களுக்கான 60 சதவிகித சம்பளத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்... 40 சதவிகிதம் மாநில அரசு ஏற்றுகொள்ள வேண்டும்.

சில சிறப்பு பகுதிகளுக்கு மட்டும் 90 சதவிகித சம்பளத்தை மத்திய அரசு ஏற்றுகொள்ளும், மீதி 10 சதவிகிதத்தை அந்தப் பகுதி அரசு ஏற்றுகொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தில் ஒரு ஆண்டிற்கு 60 நாள் வரை வேலை இல்லாமல் இருக்கலாம். அதாவது, ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயிர் இல்லாத காலங்களில் தான் பெரும்பாலும் வேலை இருக்கும். அது எத்தனை காலத்திற்கு நீளும் என்று முன்பு தெரியாது. ஆனால், இப்போது இந்த வேலை நிறுத்தம் ஆண்டிற்கு 60 நாள்கள் மட்டுமே இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தில் பணி செய்ததற்கான பணத்தை வாரம் ஒருமுறை கட்டாயம் கொடுத்துவிட வேண்டும். இது அதிகபட்சம் 15 நாள்களுக்கு தாண்டக்கூடாது.' உள்ளிட்ட மாற்றங்கள் மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சோழவந்தான் தனியார் பள்ளியில் மாணவ, மாணவிகளிடம் கட்டாய மதமாற்றமா??? பள்ளி செயலரின் அடாவடியால், அவதிப்படும் ஆசிரியைகள்!!!




**மதுரை மாவட்டம் சோழவந்தானில் பிரபலமான தனியார் மெட்ரிக் பள்ளி இயங்கி வருகிறது இப்பள்ளியை வியாபாரத்திற்கும் நேர்மைக்கும் பெயர் பெற்ற சமூகத்தின் கீழ் இப்பள்ளி கடந்த 35 ஆண்டுக்கு மேலாக இயங்கி வருகிறது இந்த தனியார் பள்ளியை இந்து மதமுறைகள் படி நடத்தப்பட்டு வருகிறது வியாபார சமூகமான நாடார்கள் வணங்கும் பத்திரகாளி அம்மன் அருளால் இந்த மெட்ரிக் பள்ளி இயங்கக வருவதாக அச்சமூக மக்கள் நம்பிக்கை தெரிவிக்கிறது.**

இந்த நிலையில் இப்பள்ளியில் பின்பக்க வழியாக பள்ளி நிர்வாக செயலாளராக பதவி பெற்று கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக உறவின்முறை சமுதாயத்துக்கு எதிராக செயல்பட்டு பள்ளி நிர்வாகத்தை சீரழித்து, தான் ஒரு அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றதாக கூறிக் கொள்ளும் ஃபென் ஜாம் என்ற கிறிஸ்தவர் செய்யும் அட்டூழியத்தால் நாளுக்கு நாள் பள்ளியின் பெயர் சீர் கெட்டு வருவதாக உறவின்முறையாளர்கள் வருத்துடன் கூறுவதை காணமுடிகிறது.

இது குறித்து உண்மை அறிய வியாபார சமுதாயம் நடத்தும் தனியார் மெட்ரிக் பள்ளிக்குச் சென்று அங்கு பயிலும் மாணவர்களிடமும் ஆசிரியர்களும் விசாரித்ததில் பள்ளி மாணவ மாணவிகளிடம் கட்டாய மதமாற்றம் போன்று, கட்டாய படுத்துவதாக மாணவ மாணவிகள் தெரிவித்தனர்.

மேலும் தனியார் மெட்ரிக் பள்ளியில் வரும் பல கோடி ரூபாயை கள்ளக் கூட்டணி வைத்து கொள்ளை அடித்து வருவதாகவும் இந்த சமூகத்தின் முக்கிய நபர் தெரிவித்தார் இது பற்றி விரிவாக அறியும்போது சமுதாயத்துக்கு சொந்தமான இந்த பள்ளி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நிர்வாக சீர்கேட்டால் இவரிடம் சிக்கி சீரழிவதாக கூறப்படுகிறது



இந்த நிலையில் இந்த சோழவந்தான் இந்து நாடார் உறவின்முறை பரிபால சங்கம் என்றும் அதற்கு தலைவராக இருப்பவர் பெருமாள் மகன் தங்கபாண்டியன் நாடார் இவரது சம்மந்தியான ஃபென்ஜாம் என்பவர் மெட்ரிக் பள்ளியில் செயலாளராக உள்ளார் இவர்கள் இருவரும் மறைமுகமாக நடத்தும் கூட்டுக் கொள்ளை அட்டகாசத்தால் நாளுக்கு நாள் பொதுமக்களிடமும் அவப்பெயரை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

இப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் மாணவச் சேர்க்கை மற்றும் கல்வி கட்டணத்தை தன்னிச்சையாக முடிவெடுத்து வருவாய் ஈட்டி அதனை ஆட்டைய போட்டு வருவதாகவும் சொல்லபடுகிறது.



தற்போது கிறிஸ்துமஸ் விழா, புத்தாண்டு விழா வை மாணவ, மாணவிகளிடம் ஏசு ஒருவரே தேவன் அவரே உண்மையான கடவுள் மற்றது வெறும் கல் என பிரசங்கம் செய்து மத போதனை வகுப்பு நடத்தி பள்ளி மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் வகுப்பறை பகுதியில் கிறிஸ்துமஸ் குடில் அலங்கார பொருட்களை அலங்கரித்து, மாணவ மாணவிகளிடம் கட்டாயமாக வந்து வணங்க வேண்டும் இயேசுவே கடவுள் என்று கூறவேண்டும் என்று கட்டாயப்படுத்தி பள்ளி மாணவர்களை மிரட்டி வருவதாக கூறப்படுகிறது.

இதனை அறிந்த உள்ளூர் இந்து சமய மற்றும் பாஜகவினர் பள்ளி நிர்வாகத்தினரிடம் சென்று முறையிட்டு நியாயம் கேட்டனர் அதனை சிறிதும் கண்டுகொள்ளாதா, குறுக்கு புத்தி ஃபென்ஜாம் நியாயம் கேட்டவர்களிடம் போலீசிடம் சொல்லி உங்களை உள்ளே தள்ளி விடுவேன் என்று மிரட்டி உள்ளார் இச்சம்பவத்தால் அங்கு பரபரப்பு உண்டானதால் அங்கு பள்ளி யின் உண்மையானவர்கள் சிலர் மற்றும் பொது சமுதாயத்தை சேர்ந்த முக்கியஸ்தர்கள் வந்து இது வெளியே தெரிய வேண்டாம் நாங்கள் பேசி முடித்துக் கொள்கிறோம் என்று கூறியதால் பாஜகவினர் கலைந்து சென்றனர் ஆனால் இதையெல்லாம் கண்டு கொள்ளாத மெட்ரிக் பள்ளி செயலாளர் ஃபென்ஜாம் தான் வைத்தது தான் சட்டம் நான் சொல்லுவது தான் இங்கு எல்லாம் சரியா நடக்கணும் என்று கூறி பள்ளி கிறிஸ்தவ மதத்திற்கு மாற எல்லா வேலையும் பார்த்து விட்டேன், ஒழுங்க எனது பெயருக்கு மெட்ரிக் பள்ளியை மாற்றி தர வேண்டும் என்று கூறி சமுதாய மக்களை மிரட்டி வருவதாகவும் கூறப்படுகிறது இதே போன்று சோழவந்தான் சிஎஸ்ஐ தேவாலயத்தில் இந்த ஃபெஞ்சாம் ஆடிய ஆட்டத்தால் சிஎஸ்ஐ தேவாலயம் இவரை தேவாலய சேவை பணியிலிருந்து நீக்கம் செய்தது, பேராசை பிடித்த நபரானவர் அங்கிருந்து மெட்ரிக் பள்ளி நிர்வாகத்தை கைப்பற்றிய ஃபென்ஜாம் இதில் கிடைக்கும் லட்சக்கணக்கான ரூபாய் மற்றும் மதிப்பு மரியாதைகளை அறிந்து பள்ளியை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடுவதாக சமூகத்தைச் சேர்ந்த பெயர் கூற விரும்பாத அப்பாவிகள் தெரிவித்தனர் மேலும் பள்ளி மாணவ மாணவியரிடம் கட்டாய மதமாற்றம் செய்ய வற்புறுத்தி வருவதால் பள்ளி வளாக பகுதி பதட்டமாக உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பள்ளி நிர்வாக செயலாளராக ஃபென்ஜாம் வந்ததிலிருந்து இங்கு நாடார் உறவின்முறை பல்வேறு வழிகளில் பெயர் கெட்டு சீர்குலைந்து உள்ளதாகவும் இதனை தட்டிக் கேட்கும் நபர்கள் மீது லோக்கல் போலீசாரை வைத்து பொய் வழக்கு பதிவு செய்து மிரட்டி வருவதாகவும், அதேபோன்று உறவின்முறைக்கு பல்வேறு இடையூறுகளும் செய்து வருவதாக தெரிவித்தனர்.

இப்பிரச்சனையால் அப்பகுதி பரபரப்பாக காணப்படுகிறது இதனை மாவட்ட கல்வித்துறையும் மாவட்ட ஆட்சியரும் நேரடியாக பள்ளிக்கு வந்து உரிய விசாரனை நடத்தி நடவடிக்கை எடுப்பாரா என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.




தூத்துக்குடி மாவட்ட புதிய போலீஸ் சூப்பிரண்டாக சிலம்பரசன் பொறுப்பேற்பு. தூத்துக்குடி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றி வந்த ஆல்பர்ட் ஜான் மத்திய அரசின் தேசிய புலனாய்வு முகாமிற்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டார். பின்னர் நெல்லை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றி வந்த சிலம்பரசன் தூத்துக்குடி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக நியமனம் செய்யப்பட்டார். இந்நிலையில் தூத்துக்குடி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக சிலம்பரசன் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து அவர் மாவட்ட கலெக்டர் இளம்பகவத்தை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

---







தமிழ்நாடு கூடுதல் காவல்துறை இயக்குனர் (சட்டம் & ஒழுங்கு) முனைவர். மகேஸ்வர் தயாள்.**IPS** அவர்கள் கடலூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு சம்பந்தமான ஆலோசனை கூட்டம் நடத்தினார். விழுப்புரம் சரக துணைத் தலைவர் திரு.**Ara.**அருளரசு.**IPS**, கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. **S.** ஜெயக்குமார் **IPS** , கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு. **N.** கோடீஸ்வரன், திரு. **V.** ரகுபதி துணை காவல் கண்காணிப்பாளர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றனர்.



# கோவையிவை அதிர வைக்கும் துணிகர சம்பவம்: ஆசிரியை வீட்டில் கொள்ளை...

**கோவையில் தனியார் பள்ளி ஆசிரியை வீட்டில் 103 பவுன் நகைகளை கொள்ளையடித்த கொள்ளையர்களை பிடிக்க 3 தனிப்படை அமைக்கப்பட்டுள் ளது.**

கோவை குனியமுத்தூர் அடுத்த பி.கே. புதூர் அய்யப்பா நகரை சேர்ந்தவர் ஜெப மார்ட்டின் (45). இவர் குனியமுத்தூர் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசி ரியை பணிபுரிந்து வருகிறார். இவருக்கு இரு மகள்கள் உள் ளனர். அதில் ஒருவர் கல்லூரி யிலும், மற்றொருவர் பள்ளியிலும் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 24ம் தேதி இரவு ஜெப மார்ட்டினுக்கு அவரது உறவினர் ஒருவர் சாத் தான்குளத்தில் விபத்தில் இறந்து விட்டதாக தகவல் கிடைத்துள் ளது. இதையடுத்து அவர் அன்று இரவு தனது மகள்களை அழைத்து கொண்டு தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்திற்கு சென்றார்.

அங்கு துக்க நிகழ்ச்சிகளை முடித்து கொண்டு நேற்று காலை வீடு திரும்பினார். அப்போது, வீட்டின் கதவு திறந்திருந்ததைக் கண்டு ஜெப மார்ட்டின் அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது, பீரோவில் இருந்த 103 பவுன் நகைகள் மற்றும் ரூ.10 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றை கொள்ளையர்கள் கொள்ளை யடித்து சென்றது தெரியவந்தது.

சம்பவ இதுகுறித்து ஜெப மார்ட்டின் குனியமுத்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார், மோப்ப நாய் மற்றும் கைரேகை நிபுணர்கள் உடன் இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் வீட்டின் கதவு, பீரோ உள்ளிட்ட இடங்களில் பதிவாகி இருந்த கைரேகைகளை சேகரித்த னர். மோப்ப நாய் சிறிது தூரம் சென்று நின்றது. இதை தொடர் ந்து போலீசார் அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சி களை ஆய்வு செய்தனர்.

முதற்கட்ட விசாரணையில் கொள்ளையர்கள் கதவை உடைக் காமல் கள்ளச் சாவியை போட்டு கதவை திறந்து உள்ளே சென்று நகைகளை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது. இந்த துணிகர சம்பவத்தை தெற்கு துணை கமிஷனர் கார்த்திகேயன் நேரில் சென்று ஆய்வு செய்து விசாரணை நடத்தினார்.மேலும், 3 தனிப்படை அமைத்து கொள்ளையர்களை விரைந்து பிடிக்க உத்தரவிட்டார்.

தலையணை உறையில் நகையை எடுத்து சென்ற கொள்ளையர் ஆசிரியை ஜெப மார்ட்டின் வீட்டில் கொள்ளையடிக்க திட்ட மிட்ட கொள்ளையர்கள் அவர் களது உருவம் பதிவாகாமல் இருக்க அவரது வீட்டின் அருகில் இருந்த வீடுகளின் சிசிடிவி கேமி ராக்களை அடித்து உடைத்துள்ளனர். சில வீடுகளில் சிசிடிவி கேமி ராக்களின் வயர்களை அறுத்து துண்டித்துள்ளனர். இதேபே?ல படுக்கை அறையில் இருந்த பீரோவில் நகைகளை கொள்ளையடித்த கொள்ளையர்கள் அதனை அங் கிருந்த தலையணை உறையில் போட்டு கொண்டு தப்பி சென் றுள்ளனர்.

# கஞ்சா விற்பனை செய்வதில் எல்லைப் பிரச்சனை., மோதலில் ஈடுபட்ட 7 பேர் கைது



**செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் பகுதியில் ஒரு கும்பல் பயங்கரமான மோதலில் ஈடுபடுவதாகக் காவல் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் கிடைத்தது.**

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மறைமலைநகர் போலீசார், அங்குக் கற்களாலும் ஆயுதங்களாலும் சண்டையிட்டுக் கொண்டிருந்த 7 பேரைப் பிடித்து காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். போலீசார் நடத்திய விசாரணையில் பிடிபட்டவர்கள் இரு குழுக்களாகச் செயல்பட்டது தெரியவந்தது:


மதுரையைச் சேர்ந்த மணிகண்டன் (25), அவரது நண்பர்கள் திருநெல்வேலியைச் சேர்ந்த மாயாண்டி (21) மற்றும் பேச்சிதுரை (20). மறைமலைநகர் பேரமனூர் பகுதியைச் சேர்ந்த ராகுல் (26), சென்னை வடபழனியைச் சேர்ந்த மோகன செல்வன் (19), விக்னேஷ்வரன் (28) மற்றும் கோடம்பாக்கத்தைச் சேர்ந்த மனிஷ் (18) என தெரியவந்தது

மணிகண்டன் தரப்பினர் கடந்த சில மாதங்களாக மறைமலைநகரில் தங்கியிருந்து, அங்கிருக்கும் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஐடி ஊழியர்களைக் குறிவைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்களுக்கும் ராகுல் தரப்பினருக்கும் இடையே கஞ்சா விற்பனை செய்வதில் எல்லைப் பிரச்சனை தொடர்பாக இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 1 கிலோ 700 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இதனையடுத்து, 7 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்த போலீசார், அவர்களைச் செங்கல்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**


















# அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்களது இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்

**NEETHIYIN NUNNARIVU** - Tamil Monthly

**RNI No. TNTAM/2020/80067**





*வாசகர்கள் மற்றும்*
*காவல்துறை*
*நண்பர்கள்*
*அனைவருக்கும்*

# இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துகள்

# நீதியின் நுண்ணறிவு

**புலனாய்வு இதழ்**
**குழுமத்தினர்**



ஆசிரியர்
**R.சிவகுமார்**